[1979 மார்ச் 13

சேரன்மாதேவியினை தாலுகாவாக உயர்த்தல்.

* வினா எண்—362 திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேரன்மாதேவியை தனித் தாலுகாவாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவரவர்களே, சேரன்மாதேவியை தனி வட்டமாக ஆக்க வேண்டும் என்பது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது.

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, பெரியார் அவர்கள் சீர்திருத்தக் கருத்தைப் பரப்புவதற்கு இந்த சேரன்மாதேவி மிக உறுதுணையாக இருந்தது. ஆகவே பெரியார் நூற்றாண்டாகிய இந்த ஆண்டில் அதனைத் தனித் தாலுகாவாக ஆக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைத்தான் அரசு கவனமாக எண்ணிக்கொண்டிருக்கிறது. ஆகவே விரைவில் ஒரு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு இடம் ஒதுக்கீடு.

* வினா எண்—363 திரு. எஸ். கணேசன் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பக்கிங்காம் கால்வாய்க்கு மேற்கே ரயில் நிலைய விஸ்தரிப்புக்கு அவசியமான நிலத்தைத் தர மாநில அரசு ஒத்துக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 42.03 ஏக்கர் நிலத்தை ரூபாய் 2.70 கோடிக்கு இரயில்வே இலாகாவிற்குக் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : சென்ட்ரல் ஸ்டேஷன் விஸ்தரிப்புக்காக பக்கிங்காம் கால்வாயின் மேற்குப் பகுதியில் நிலத்தை அளித்திருப்பதுபற்றி அமைச்சர் அவர்கள் அவித்தார்கள். அதில் மூர் மார்க்கட்டும் அடங்கியிருக்கிறதா ? மூர் மார்கட்டில் இப்போது வியாபாரம் செய்துவரும் வணிகப் பெரு

1979 மார்ச் 13]

மக்கள் இந்தத் திட்டத்தினால் மிகவும் பாதிக்கப்படுவதாக அரசுக்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே மூர் அங்காடியை இடிக்கவேண்டிய சூழ்நிலை வந்தால் அவர்களுக்கு வேறு தகுந்த இடத்தை அளிக்க அரசாங்கம் ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம் : மூர் மார்க் கட்டில் உள்ளவர்களுக்காக தனி அங்காடி, கடைகள் கட்டி அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதுவும் விரைவில் இந்தத் திட்டத்தோடு சேர்த்து ஆரம்பிக்கப்படும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : ரெயில்வே விஸ்தரிப்பிற்காக மூர்மார்க்கட் மற்றும் மிருகக்காட்சிசாலை ஆகிய இடங்களை மத்திய அரசுக்குக் கொடுக்கக்கூடிய நேரத்தில் வட சென்னையில் கண்ணப்பர் திடலில் ஜனதா ஹோட்டலை மூன்று கோடி ரூபாய் அளவில் கட்ட மத்திய அரசுக்கு நிலம் கொடுக்க மாநில அரசு முன்வந்திருக்கிறது. இதனால் ரெயில்வே விஸ் தரிப்புத் திட்டம் பாதிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மக்களின் நலனைக் கருதி மாநில அரசு மத்திய அரசின் திட்டங்களை நிறைவேற்ற உதவுவதற்கு முன்வந்திருக்கிறது. அதேபோன்று நீண்ட காலமாக இருந்த கோரிக்கை, மத்திய ரெயில்வே நிலையத்தினை விரிவு படுத்துவது சம்பந்தமாக அதற்காக நிலம் கொடுக்கப்படுகிறது. அதேபோல் ஏழை எளிய மக்கள் தங்குவதற்கும், அவர்களுக்கு உணவு விடுதி சரியாக இல்லாத காரணத்தால் ஜனதா ஹோட்டலைக் கட்ட மத்திய அரசு முன்வருகிறபோது அதற்கு நிலம் கொடுக்க மாநில அரசு முன்வந்திருக்கிறது. இரண்டுக்கும் சங்கடம் இல்லாத வகையில் பேசி முடித்துக் காரியங்கள் நல்ல முறையில் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. தீ. சு. நல்லதம்பி : மூர் அங்காடியை வேறு இடத்தில் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விரைவில் என்றால் எவ்வளவு சீக்கிரம் என்பதையும், நேற்று முன்தினம்—சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மத்திய அமைச்சர் அவர்களை வைத்து நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கூட அடுத்தாண்டு சுற்றுலா விற்காக பெரியதொரு நிகழ்ச்சியை தமிழ்நாட்டில் நடத்தப் போவதாகச் சொல்லியிருப்பது பத்திரிகை வாயிலாகத் தெரிய வருகிறது. அந்நிலையில் இந்த மூர் மார்க்கட்டை நல்ல நிலையில் அதே இடத்தில் அல்லது அருகாமையில் உள்ள வி. பி. ஹாலைச் சுற்றியுள்ள இடத்தில் அமைப்பதற்கு அமைச் சரவையும், அரசாங்கமும் நடவடிக்கை எடுக்கும் என்ற உத்தர வாதத்தை அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மூர் அங்காடியில் இன்று கடைகள் வைத்திருப்பவர்களை அப்புறப்படுத்துவதற்கு முன்னால் அவர்களுக்குக் கட்டடத்தைக் கட்டி அவர்களுக்கு இடம் கொடுத்துவிட்டுத்தான் அப்புறப்படுத்துவோம் என்று நான உறுதியளிக்கின்றேன்.

சுற்றுலாத் துறையின் கீழ் உள்ள ஓட்டல்கள்.

* வினா எண். 364 திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சுற்றுலாத்துறை நிர்வாகத்தில் தற்பொழுது ஓட்டல்கள் ஏதேனும் இயங்கி வருகின்றனவா?

(ஆ) ஆம் எனில் எங்கெங்கே?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தில் உணவு விடுதி தனியாக ஏதும் இல்லை. ஆனால் இத்துறையைச் சார்ந்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நிர்வாகத்தின் கீழ் உணவு விடுதி வசதியுடன் கூடிய 13 சுற்றுலா மாளிகைகளும் 1 சாலை ஓர விடுதியும் இயங்கி வருகின்றன.

(ஆ) சுற்றுலா கழகத்தின் கீழ் இயங்கி வரும் சுற்றுலா பயணிகள் விடுதிகள்;

(1) மாமல்லபுரம்

(2) சிதம்பரம்

(3) தஞ்சை

(4) திருச்சி

(5) மதுரை

(6) இராமேஸ்வரம்

(7) கன்னியாகுமரி } கன்னியாகுமரி

(8) கேப் ஹோட்டல் }

(9) திருச்செந்தூர்

(10) ஒகேனக்கல்

(11) உதகை

(12) ஏற்காடு

(13) கொடைக்கானல்

சுற்றுலா கழகத்தின் கீழ் இயங்கிவரும் சாலை ஓர விடுதி இராணிப்பேட்டை.